ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1133/9 – 2000 මැයි 23 වැනි අඟහරුවාදා – 2000.05.23
1133/9 ஆம் இலக்கம் – 2000 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 21/78 IV

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளை விதி*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2000, வைகாசி 08.

### கட்டளைவிதி

1. இக்கட்டளை விதி, 2000 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவக (திருத்தக்) கட்டளைவிதி என எடுத்தக்காட்டப்படலாம் என்பதுடன், 2000 ஆம் ஆண்டு ஆனி மாதம் 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1996 மே 9 ஆந் திகதிய 922/9 ஆம் இலக்க அதிவிசேடமான வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவக (திருத்தக்) கட்டளை விதியின் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1980, ஏப்பிறல் 10 ஆந் திகதிய 83/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகக் கட்டளைவிதி இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதற்கான 13 ஆம் பந்தியின் (ஞ) என்னும் உட்பந்தியில் "ஊடு கதிர் மருத்துவ முறையும் ஒண்கோவியலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிணியாய்வு நிலையம் சார் ஒண்கோவியல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அதன் 14 ஆம் பந்தியில் –

(i) அதற்கான (1) ஆம், (2) ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(1) இலங்கையில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றாலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையாலோ தாபிக்கப்பட்ட கற்கைத்துறையொன்றுக்கான சிறப்புக்கூறொன்று தொடர்பில் கற்கைச் சபையொன்று

தாபிக்கப்பட்டிருப்பின், அத்தகைய சபையானது, (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாகப் பின்வரும் ஆட்களைக் கொண்டமைந்ததாகவிருத்தல் வேண்டும் :—

(அ) பணிப்பாளர் ;

(ஆ) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவபீடம் அல்லது மருத்துவ விஞ்ஞானங்களுக்கான பீடம் ஒவ்வொன்றினதும் கற்கைத் துறைத் தலைவர்கள் அல்லது அவர்களின் நியமந்தர்கள் ;

(இ) (i) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவபீடத்தின் அல்லது மருத்துவ விஞ்ஞானங்கள் பீடங்களின் அத்தகைய பீடங்களின் சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடமிருந்து நுண்ணுயிரியலுக்கான சிறப்புக்கூறு நீங்கலாகத் தெரிவு செய்யப்பட்ட மூன்று உறுப்பினர்கள் ;

(ii) நுண்ணுயிரியலுக்கான சிறப்புக்கூறு தொடர்பில், இச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களின் அல்லது மருத்துவ விஞ்ஞானங்கள் பீடங்களின் ஒட்டுண்ணியியற் துறையின் தலைவர்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட மூவர் ;

(iii) சமூக மருத்துவவியலுக்கான சிறப்புக்கூறு தொடர்பில் இச்சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பல் வைத்திய பீடங்கள் ஒவ்வொன்றினதும் சமூக பற்சுகாதாரத் துறையிலுள்ள சமூகப் பல்மருத்துவப் பிரிவின் தலைவர்கள் ;

(ஈ) (i) சமூக மருத்துவம், குடும்ப மருத்துவம் மற்றும் பொது வைத்தியம் என்பவற்றுக்கான சிறப்புக்கூறு நீங்கலாக -

(அ) பிரதான பயிற்சி நிலையங்களில் இருந்து மூன்று பிரதிநிதிகள் ;

(ஆ) பின்வரும் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து பிரதிநிதியொருவர் :—

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை ;

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை ;

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை ;

போதனா வைத்தியசாலை, கண்டி ;

போதனா வைத்தியசாலை, காலி ;

போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் ;

(ii) நுண்ணுயிரியலுக்கான சிறப்புக்கூறு தொடர்பில், (1) ஆம் உட்பந்தியின் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக இலங்கைத் தேசிய வைத்தியசாலையிலிருந்து மேலதிகப் பிரதிநிதியொருவர் ;

(iii) சமூக மருத்துவத்துக்கான சிறப்புக்கூறு தொடர்பில், பின்வரும் நிலையங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து ஆகக் குறைந்தது ஒரு பிரதிநிதியாவது இருக்குமாறு, பயிற்சி நிலையங்களிலிருந்து பத்துப் பிரதிநிதிகள் :—

குடும்ப சுகாதாரப் பணியகம் ;

சுகாதார, விஞ்ஞானங்களுக்கான தேசிய நிறுவகம், களுத்துறை ;

மலேரியா தடுப்பு இயக்கம் ;

தொற்று நோய்க்கூறு ;

பாலியலுறவு மூலம் பரப்பப்படும் நோய்கள்/எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் ;

(iv) குடும்ப வைத்திய மற்றும் பொது வைத்தியம் ஆகியவற்றுக்கான சிறப்புக்கூறு தொடர்பில், கற்கைச் சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களான பயிற்சிக் கூறுகளிலிருந்தான ஒன்பது பிரதிநிதிகள்.

(உ) (1) குடும்ப மருத்துவம் மற்றும் பொது வைத்தியம் என்பவற்றுக்கான சிறப்புக்கூறு தவிர்ந்த இயைபுடைய உயர் தொழிற் குழுவிலிருந்து இரண்டு உறுப்பினர்கள், அவர்களில் -

(i) ஒரு உறுப்பினர் சுகாதார அமைச்சைச் சேர்ந்தவராயும் ; அத்துடன்

(ii) ஒரு உறுப்பினர் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பணியாட் தொகுதியைச் சேர்ந்தவராயும்,

இருத்தல் வேண்டும்.

(2) இலங்கையிலுள்ள பல்கலைக்கழகம் எதனாலும் எக்கற்கைத்துறையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லையோ அக்கற்கைத்துறையொன்றுக்கான சிறப்புக்கூறு தொடர்பில் கற்கைச் சபையொன்று தாபிக்கப்பட்டிருப்பின், அத்தகைய கற்கைச் சபையானது (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாகப் பின்வரும் ஆட்களைக் கொண்டமைந்ததாகவிருத்தல் வேண்டும் :—

(அ) பணிப்பாளர் ;

(ஆ) சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவபீடங்கள் அல்லது மருத்துவ விஞ்ஞானங்கள் பீடங்கள் ஒவ்வொன்றினதும் சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினரொருவர் ;

(இ) (i) கதிரியக்கவியல், நோயியல், பிணியாய்வு நிலையம்சார் ஒண்கோவியல் மற்றும் மருத்துவ நிருவாகம் ஆகியவற்றுக்கான சிறப்புக்கூறுகள் தவிர்ந்தவற்றில் –

(அ) பிரதான பயிற்சி நிலையத்திலிருந்து மூன்று பிரதிநிதிகள் ;

(ஆ) பின்வரும் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து பிரதிநிதியொருவர் :—

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை ;
கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை ;
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை ;
போதனா வைத்தியசாலை, கண்டி ;
போதனா வைத்தியசாலை, காலி ;
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் ;

(ii) கதிரியக்கவியலுக்கான சிறப்புக்கூறு தொடர்பில், (1) ஆம் உட்பந்தியின்கீழான பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக, லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையிலிருந்து மேலதிகப் பிரதிநிதியொருவர் ;

(iii) பிணியாய்வு நிலையம்சார் ஒண்கோவியலுக்கான சிறப்புக்கூறு தொடர்பில் (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களிலிருந்து ஒன்பது பிரதிநிதிகள், அவர்களில் குறைந்தபட்சம் மூவராவது பிரதான பயிற்சி நிலையத்திலும் மற்றும் மகரகமை புற்றுநோய் நிறுவகத்திலும் இருப்பவர்களாக விருத்தல் வேண்டும் ;

(iv) மருத்துவ நிருவாகத்துக்கான சிறப்புக்கூறு தொடர்பில், கற்கைச் சபையினால், பயிற்சிக் கூறுகளிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களான ஒன்பது பிரதிநிதிகள்.";

(ii) அதன் (2) ஆம் உட்பந்தியை உடனடுத்துப்பின்னர், பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(3) ஓராம், இரண்டாம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட கற்கைச் சபையின் அத்தகைய உறுப்பினர்கள் யாவரும் பயிற்றுவிப்பாளர்களாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், குடும்ப மருத்துவம் மற்றும் பொது வைத்தியம் என்பவற்றுக்கான சிறப்புக்கூறுகளில் தவிர, பயிற்றுவிப்பாளரொருவர், சபையினாற் சான்றுப்படுத்தப்பட்ட பின் அல்லது சபையால் சான்றுபடுத்தப்படுவதற்கான சிறப்புரிமைகளுக்கான தகவுத்திறன் பெற்றதன் பின்னரான மூன்று வருட அனுபவத்தைக் கொண்டுள்ள, ஓர் ஆளாக அல்லது துணைப் பிரயோக சிகிச்சை நெறிகளின் விடயத்தில் மருத்துவக் கலாநிதிப்பட்டம் அல்லது தொடர்புற்ற துறையில் அதற்குச் சமமான பட்டத்தைப் பெற்றதன் பின்னர் ஐந்து வருட அனுபவத்தைக் கொண்டுள்ள அல்லது தொடர்புள்ள துறையில் பயிற்றுவிப்பாளரொருவராக மூன்று வருட அனுபவத்தைக் கொண்டுள்ள ஓர் ஆளாகவிருத்தல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும் உட்பந்தி (1) (ஈ) மற்றும் உட்பந்தி (2) (இ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களிலிருந்தான பிரதிநிதிகள், விடயத்திற்கேற்றவாறு தொடர்புற்ற சிறப்புக்கூறுக்கான சுகாதார அமைச்சின்

பயிற்றுவிப்பாளர்களால் பயிற்சி நிலையங்களில் இருந்து தெரிவுசெய்யப்படுவார்கள். சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமை அதிபதி அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவு செய்யப்பட்டவர்களான அத்தகைய ஆட்களின் பெயர்களைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3அ) பல் சத்திர சிகிச்சைக்கான சிறப்புக்கூறுக்கான கற்கைச் சபையொன்று தாபிக்கப்பட்டிருக்கும்போது, அத்தகைய சபையானது பின்வரும் ஆட்களைக் கொண்டமைந்ததாயிருத்தல் வேண்டும் :—

(அ) பணிப்பாளர் ;

(ஆ) பின்வரும் கற்கைநெறிகள் ஒவ்வொன்றினதும் பிரிவுக்கான தலைவர் அல்லது அவரது நியமந்தர் :—

வாய்சார் அறுவைச் சிகிச்சை ;
வாய்சார் மருத்துவவியல் ;
வாய்சார் நோயியல் ;
மீளமைப்பு பற்சிகிச்சை ;
செயற்கைப் பற்சிகிச்சை ;
சமூக பற்சுகாதாரம் ;
பல் என்புவியல் ;
குழந்தைப் பற்சிகிச்சையியல் ;
பல்சார்ந்த நோயியல் ;
அடிப்படை விஞ்ஞானங்கள் ;

(இ) தொடர்புற்ற உயர்தொழில் குழுவிலிருந்து பத்து உறுப்பினர்கள், அவர்களில் ஆகக்குறைந்தது –

(i) மூன்று உறுப்பினர்களாவது பிரதான பயிற்சி நிலையத்தைச் சேர்ந்தவர்களாயும் ;

(ii) ஓர் உறுப்பினராவது மகரகமை, புற்றுநோய் நிறுவகத்தைச் சேர்ந்தவராயும் ;

(iii) ஓர் உறுப்பினராவது கண்டி பொது வைத்தியசாலையைச் சேர்ந்தவராயும்,

இருத்தல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும் பல்கலைக்கழகமொன்றை அல்லது பயிற்சி நிலையமொன்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்கள், எந்தப் பதவிகளை வகிப்பதன் பயனாகக் கற்கைச் சபையில் உறுப்பினர்களாக விருக்கின்றார்களோ அந்தப் பதவிகளைக் கொண்டிருக்கும்வரையில் அவர்கள் பதவியிலிருத்தல் வேண்டும் ;" அத்துடன்

(3) அதன் 25 ஆம் பந்தியில் "மருத்துவவியலுக்கான சிறப்புக்கூறு" என்பதன் வரைவிலக்கணத்தில் "ஊடுகதிர் மருத்துவ முறையும் ஒண்கோவியலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிணியாய்வு நிலையம்சார் ஒண்கோவியல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

3. இக்கட்டளை விதியில் –

"சட்டம்" என்பது 1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, 1988 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, 1988 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, 1988 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, 1989 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மற்றும் 1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டங்கள் மூலம் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும்.

06–186

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.